www.Padasalai.Net Class www.TrbTnpsc.com

Tsi7T

தென்காசி மாவட்டம்

தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2023

-----

காலம்: 2.00 மணி

வகுப்பு 7

தமிழ்

மதிப்பெண்கள்: 60

பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) வேயாமாடம் எனப்படுவது ................

அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது

இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது

2) தொல்காப்பியம் கடற்பயணத்தை ................ வழக்கம் என்று கூறுகிறது.

அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்

3) 'ஏடெடுத்தேன்' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

அ) ஏடெடு+தேன் ஆ) ஏட்டு+எடுத்தேன்

இ) ஏடு+எடுத்தேன் ஈ) ஏ+டெடுத்தேன்

4) எவன்+ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................

அ) எவன்ஒருவன் ஆ) எவன்னொருவன்

இ) எவனொருவன் ஈ) ஏன்னொருவன்

5) நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை ................

அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5×1=5

6) கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ................

7) ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் ................

8) மிளகாய் வற்றலின் ................ தும்மலை வரவழைக்கும்.

9) 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள் ................

10) மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் ................ மீது பொறித்துப் பாதுகாத்தனர்.

**III. பொருத்துக:** 5×1=5

| | | |
|---|---|---|
| 11) மீகாமன் | - | மன் |
| 12) முகில் | - | காகம் |
| 13) இடைப் பகாப்பதம் | - | சூடு |
| 14) முதனிலை திரிந்த தொழிற்பெயர் | - | மேகம் |
| 15) கரவா கரைந்துண்ணும் | - | கப்பலைச் செலுத்துபவர் |

பகுதி - II

**IV. எவையேனும் நான்கனுக்கு விடை தருக:** 4×2=8

16) மரக்கலங்களைத் துறைமுகம் நோக்கி அழைப்பது எது?

17) நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?

18) தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.

19) கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

20) தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?

21) சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

Tsi7T



## பகுதி - III

**V. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×2=4

22) குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?

23) பதத்தின் இருவகைகள் யாவை?

24) தொழிற்பெயர் எவற்றைக் காட்டாது?

**VI. மனப்பாடப்பகுதி:** 4+2=6

25) கட்டி அடிக்கையால் ........... எனத் தொடங்கும் இரட்டுறமொழிதல் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

26) எண்ணித் ............. எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - IV

**VII. ஏதேனும் மூன்றனுக்கு விடையளி:** 3×3=9

27) கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?

28) கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.

29) கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.

30) ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

31) முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

## பகுதி - V

**VIII. ஏதேனும் இரண்டனுக்கு விடையளி:** 2×5=10

32) ஆழ்கடலின் அடியில் கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

மதிவாணன் பள்ளிக்கு செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

33) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தரவேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

எங்கள் ஊர் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## பகுதி - VI

**IX. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 4×2=8

34) **கலைச்சொல் அறிக:**

அ) Harbour

ஆ) Modern Art

35) **பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக:**

அ) அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான். வந்தான்

ஆ) ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.

36) **சரியான சொல்லைக் கண்டறிந்து நிரப்புக:**

**(அவர்கள், நாம், நீ)**

அ) .............. ஏழாம் வகுப்பு மாணவர்கள்.

ஆ) .............. என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

37) **இடைச்சொல் சேர்த்து தொடர் உருவாக்குக:**

அ) கடல் பார்த்தான்

ஆ) அறம் கூறினார்

----------